1973 சனவரி 24]

திருவேடகத்தில் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை

*19 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா--

பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை அமைக்க மதுரை மாவட்டத்திலுள்ள திருவேடகத்தில் இடம் பார்க்கப்பட்டுள்ளது உண்மையா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதுரை மாவட்டத்தில் பொட்டாசியம் குளோரைட் தொழிற்சாலை ஒன்று அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. போதுமான அளவு நீர்வசதியும் மின்சக்தியும் கிடைத்தால், மூலப்பொருள்கள் கிடைக்குமிடங்களுக்கும் உற்பத்திப் பொருளைப் பயன்படுத்தும் இடங்களுக்கும் அண்மையிலிருத்தல் மற்றும் இன்றியமையாத அடிப்படை வசதிகளும் போதுமான அளவில் போக்குவரத்து வசதிகளும் இருத்தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு மதுரை மாவட்டத்தில் தகுந்த இடம் ஒன்று தொழிற்சாலை அமைப்பதற்காகத் தெரிந்தெடுக்கப்படும்.

திரு. பி. எஸ். மணியன் : தலைவரவர்களே, அந்த பொட்டாசியம் குளோரேட் தொழிற்சாலைக்கு மதிப்பீடு எவ்வளவு? எந்த இடத்தில் அதைத் துவக்குவதாக அரசு உத்தேசித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சுமார் 68 இலட்சம் அதற்கு ஆகும். மதுரைக்கும் மேலூருக்கும் இடையில் ஒத்தக்கடையிலே ஆரம்பிக்கலாம் என்று பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

பஸ் டயர்கள் உற்பத்தி

*20 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பஸ் டயர்கள் செய்யும் புதிய தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஆம்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அப்படி அமைக்கப்படும் தொழிற்சாலை எந்த இடத்திலே எவ்வளவு மூலதனத்தோடு அமைக்கப்படும்? அப்படி அமைக்கப்பட்டபிறகு இப்பொழுது இருப்பதுபோல் வெளிமார்க்கெட்டிலே அதிக விலைகொடுத்து டயர்கள் வாங்கக்கூடிய நிலை மாற்றி அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தத் தொழிற்சாலையிலே விரைவில்
உற்பத்தி செய்ய நம்முடைய அாசாங்கம் முயற்சி எடுக்கிறது. ஆனால்,
அனுமதித்ததற்குப் பிறகு இதற்கு டெக்னிகல் கொலாபரேஷன் வேண்டுமென்று
கேட்டபொழுது, பிற நாடுகளிலே அதை பெற்றுத்தர வேண்டும் மத்திய
அரசாங்கம் இதிலே வெளிநாட்டுச் செலாவணி இருப்பதால் மத்திய அரசாங்கம்
நயக்கம் காட்டுகிறது. இதுபோன்ற அனுமதியைப் பல மாநிலங்களுக்கு
மத்திய அரசாங்கம் கொடுத்து இருக்கிறது. எல்லாத் தொழிற்சாலைகளுக்கும்
சேர்த்து 'டெக்னிக்கல் கொலாபரேஷன்' வெளிநாட்டிலிருந்து மத்திய
அரசாங்கம் பெற்றுத் தரலாமா என்ற ஆராய்ச்சியை மத்திய அரசாங்கம் இப்
பொழுது நடத்தி வருகிறது.